1972 ஆகஸ்ட் 18]

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இதற்கு முன்னர் மாணவர் ஒருவருக்கு ரூ. 10 கொடுக்கப்பட்டு வந்தது. இப்பொழுது தான் 1968-69 முதற்கொண்டு அது 12 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. ஆண்டு வருமானம் ரூ. 300 என்று இருப்பதை 400 ஆக்குகின்ற உத்தேசம் தற்சமயம் இல்லை.

Price of pulses

*162. Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(*a*) whether the Government are aware of the upward trend in pulses market in this State during May 1972; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) துவரம் பருப்பு, பச்சைப் பருப்பு, உளுத்தம் பருப்பு, கடலைப் பருப்பு ஆகியவற்றின் விலை 1971 மே திங்களிலிருந்து ஓராண்டுக் காலத்தில் 20 சத விகிதம் உயர்ந்துள்ளது. பிற மாநிலங்களில் பருப்பு உற்பத்தி குறைந்து, அதன் காரணமாக நமது மாநிலத்திற்கு வரும் பருப்பு வகைகளின் அளவு குறைந்தமையாலும் போக்குவரத்து இடர்பாடுகள் காரணமாகவும் பருப்பு விலைகள் உயர்ந்தன.

திரு. என். டென்னிஸ் : அரசு இதன் விலையை நிர்ணயம் செய்து ஃபேர் பிரைஸ் ஷாப் ஏற்படுத்துவதன் மூலம் இதன் விலையைக் குறைக்க முடியும் என்று எதிர்பார்க்கிறதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : எப்.சி.ஐ. விற்கின்ற பருப்பு வகைகளை அரசாங்கம் கேட்டுக்கொண்டிருக்கிறது. அவர்கள் கொடுத்தால், அதை இருக்கிற நியாய விலைக் கடைகள் மூலம் விநியோகிப்பதற்கு அரசு உத்தேசம் செய்திருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இது அத்தியாவசிய பண்டங்களில் உட்பட்டிருக்கிற காரணத்தினால் இதன் விலையைக் கட்டுப்படுத்துவதற்கு ஏதாவது பரிந்துரை நமது அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா? அப்படி வந்திருந்தால் அதன் கீழ் ஏதாவது நடவடிக்கை மத்திய அரசோடு தொடர்பு கொண்டு எடுக்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, எந்தப் பரிந்துரையும் நமக்கு வரவில்லை. தமிழ் நாட்டைப் பொறுத்தமட்டில் வெளி மாநிலங்களிலிருந்து பருப்பு வகைகள் வரவேண்டியிருப்பதன் காரணத்தினால், எப்.சி.ஐ. வாங்கி ஸ்டேட் கார்ப்பரேஷனுக்குக் கொடுக்க வேண்டும் என்று நாம் கேட்டிருக்கிறோம். அப்படி அவர்கள் கொடுத்தால், மாநிலத்திலுள்ள நியாய விலைக் கடைகள் மூலம் அது விநியோகிக்கப்படும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : பருப்புப் பற்றாக்குறையைப் போக்குவதற்கு நமது மாநிலத்திலேயே பருப்பு வகைகளை அதிக மாக உற்பத்தி செய்வதற்கு ஏதாவது திட்டம் தீட்டியிருக்கிறார் களா? உளுத்தம் பருப்பு விலை குறிப்பாக எக்கச்சக்கமாக ஏறிக் கொண்டிருக்கிறது. அது தமிழ் மக்களுக்கு மிகவும் அத்தியா வசியமாக இருக்கிறது. ஆகவே, அதை உடனே வாங்கி ரேஷன் கடைகள் மூலமும், நியாய விலைக் கடைகள் மூலமும் கொடுப் பதற்கு இந்த அரசாங்கம் ஏதாவது வழி செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : சென்ற ஆண்டு தமிழ் நாட்டில் ஏற்கெனவே பயிர் ஆகி வந்த 8.50 லட்சம் ஏக்கராவோடு 5.35 லட்சம் ஏக்கரா அதிகமாகப் பருப்பு வகைகள் சாகுபடி செய் வது என்று அரசாங்கம் தனித் திட்டம் வகுத்து செயல்பட்டு வருகிறது. பருப்பு வகைகளைக் கேட்டிருக்கிறோம். உளுத்தம் பருப்பும் கேட்டிருக்கிறோம். அது கிடைத்தால் இருக்கிற நியாய விலைக் கடைகள் மூலம் கொடுக்கப்படும்.

TRUTH ALONE TRIUMPHS

Distribution of rice in Kanyakumari district

* 163 *Q.*—THIRU R. PONNAPPA NADAR : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(*a*) whether it is a fact that adequate quantity of rice is not available in the belt areas of Kanyakumari district for distribution through foodgrains shops; and

(*b*) whether the Government propose to increase the allotment per individual?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) இவ் வினாவிற்கு இடமில்லை.